சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் - பொதுத் தேர்வுகள் - பள்ளிக்கல்வித்துறை இயக்ககங்களைச் சார்ந்த உயர் அதிகாரிகள் / இயக்குநர்கள் / இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்களை தேர்வுப் பணிகளை கண்காணிக்கும் அதிகாரிகளாக நியமனம் செய்து, மாவட்டங்கள் ஒதுக்கீடு செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வித் (அ.தே) துறை

அரசாணை(வாலாயம்) எண்.17 நாள்: 31.01.2025

திருவள்ளுவர் ஆண்டு 2056

குரோதி வருடம், தை-18

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 18.02.1999
2. அரசாணை (வாலாயம்) எண்.77, பள்ளிக் கல்வி (அ.தே) துறை, நாள் 31.01.2024.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க. எண்.000043/எச் 1/2025, நாள் 09.01.2025

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தேர்வுமுறை சீர்த்திருத்த வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசுத் தேர்வுகள் இயக்குநரால் நடத்தப்படும் மேல்நிலை / இடைநிலை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியன் மற்றும் ஆசிரியர் பட்டயக்கல்வி ஆகிய தேர்வுகளுக்கு பள்ளிக் கல்வி இயக்ககம் / தொடக்கக் கல்வி இயக்ககம் / பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித்துறை, ஆசிரியர் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், ஆகிய துறைகளைச் சார்ந்த இணை இயக்குநர்களை தேர்வு பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதியும், அவ்வாறு தேர்வுப்பணியில் ஈடுபடுத்தப்படும் இணை இயக்குநர்கள் தாங்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்து அறிக்கையினை அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு தெரியப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தியும் ஆணை வெளியிடப்பட்டது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2024-ஆம் கல்வியாண்டு மார்ச் / ஏப்ரலில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுப் பணிகளில், பள்ளிக் கல்வித் துறை இயக்ககங்களைச் சார்ந்த உயர் அதிகாரிகள், இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்களை, தேர்வுப் பணிகளை மேற்பார்வையிடும் கண்காணிப்பு அதிகாரிகளாக நியமித்தும், மாவட்டங்கள் ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசுத் தேர்வுகள் இயக்குநர் தற்போது மார்ச் / ஏப்ரல் 2025ல் நடைபெறவுள்ள மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கு பள்ளிக் கல்வித் துறையின்கீழ் செயல்பட்டு வரும் பிற இயக்ககங்களைச் சார்ந்த இயக்குநர் / இணை இயக்குநர் / துணை இயக்குநர் ஆகியோர் தேர்வு பணிகளை மேற்பார்வையிடச் செல்ல வேண்டிய மாவட்டங்களின் விவரங்களை இவ்வரசாணையின் இணைப்பில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு நியமனம் செய்து அரசாணை வழங்குமாறும், தேர்வு கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும் இயக்குநர் / இணை இயக்குநர் / துணை இயக்குநர்களுக்கான பயணப்படி (TA) மற்றும் தினப்படி (DA) பட்டியல்களை அவரவர்கள் பணிபுரியும் இயக்ககம் / அலுவலகத்திலேயே உரிய கணக்குத் தலைப்பில் சமர்ப்பித்து பெறுவதற்கு அனுமதி வழங்கிடுமாறும், அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அதிகாரிகள் எதிர்பாராத சூழ்நிலையில் தேர்வுப்பணி மேற்பார்வையிட செல்ல இயலாத சூழ்நிலை ஏற்படின், அவ்வமையம் அவ்வலுவலருக்கு பதிலாக வேறு அலுவலரை நியமனம் செய்யும் அதிகாரத்தினை அரசுத் தேர்வுகள் துறை இயக்குநருக்கு வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காண் சூழ்நிலையில், அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று, நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2025ல் மேல்நிலை முதலாமாண்டு/ இரண்டாமாண்டு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுப் பணிகளை மேற்பார்வையிட பள்ளிக் கல்வித் துறை இயக்கங்களைச் சார்ந்த இவ்வரசாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் ஆகியோரை அவர்களுக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் தேர்வுப் பணிகளை மேற்பார்வையிட நியமனம் செய்தும், தேர்வு கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும் இயக்குநர், இணை இயக்குநர்/துணை இயக்குநர்களுக்கான பயணப்படி (TA) மற்றும் தினப்படி (DA) பட்டியல்களை அவரவர்கள் பணிபுரியும் இயக்ககம் / அலுவலகத்திலேயே உரிய கணக்குத் தலைப்பில்

Kindly Send Me Your Questions & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



சமர்ப்பித்து செலவினங்களை பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

- மேலும், மேற்காணுமாறு நியமனம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்ட அதிகாரிகள் எதிர்பாராத சூழ்நிலையில் தேர்வுப்பணிகளை மேற்பார்வையிட செல்ல இயலாத சூழ்நிலை ஏற்படின், அவ்வமையம் அவ்வலுவலருக்கு பதிலாக வேறு அலுவலரை நியமனம் செய்யும் அதிகாரமும் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு வழங்கப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

சோ.மதுமதி
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-600 006 (இ).
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-600 006(இ).
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-600 006 (இ).
மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை-600 006 (இ).
பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர், சென்னை-600 006 (இ).
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை-600 006 (இ).
மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை-600 006 (இ).
மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை-600 006 (இ).
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை-600 005 (இ).
இயக்குநர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை,
சென்னை-600 005 (இ).
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-600 035 (இ).

<u>நகல்</u>

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், -சென்னை600 009(இ)
பள்ளிக் கல்வித் துறை செயலர் அவர்களின் தனிச் செயலர்,
சென்னை-600 009(இ)
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

www.Padasalai.Net

Kindly Send Me Your Questions & Answer Keys to Us: padasalai.net@gmail.com

அரசாணை (வாலாயம்) எண். 17, பள்ளிக் கல்வித்(அ.தே) துறை, நாள்: 31.01.2025.

## இணைப்பு

| வ. எண் | கண்காணிப்பு அலுவலரின் பெயர் / பதவி / அலுவலகம் | ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய மாவட்டம் |
|---|---|---|
| 1. | Dr.P.சங்கர், இ.ஆ.ப, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை-600 006. | தென்காசி |
| 2. | Dr. M.ஆர்த்தி, இ.ஆ.ப, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்ககம், சென்னை-600 006. | திருப்பத்தூர் |
| 3. | முனைவர்.ச.கண்ணப்பன், இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை – 600 006. | செங்கல்பட்டு |
| 4. | திருமதி. த. உமா, இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 600 006. | காஞ்சிபுரம் |
| 5. | முனைவர்.மு.பழனிசாமி, இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை – 600 006. | சென்னை |
| 6. | முனைவர்.வி.சி.இராமேஸ்வரமுருகன், செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 600 006. | கடலூர் |
| 7. | முனைவர்.C.உஷாராணி, உறுப்பினர் (பள்ளிக்கல்வி) ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-600 006. | இராணிப்பேட்டை |
| 8. | முனைவர்.சு.நாகராஜ முருகன், இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை – 600 006. | கள்ளக்குறிச்சி |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 9. | முனைவர்.பெ.குப்புசாமி,<br>செயலாளர்,<br>தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை-600 006. | சேலம் |
| 10. | திரு.ச.சேதுராமவர்மா,<br>தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-600 006. | விழுப்புரம் |
| 11. | திருமதி. ச.உமா,<br>கூடுதல் மாநில திட்ட இயக்குநர்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,<br>சென்னை - 600 006. | கோயம்புத்தூர் |
| 12. | முனைவர்.பூ.ஆ.நரேஷ்,<br>இயக்குநர்,<br>தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை- 600 006. | திருவள்ளூர் |
| 13. | திருமதி கே.சசிகலா,<br>இணை இயக்குநர் (NSS),<br>பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை - 600 006. | திருவாரூர் |
| 14. | திரு.சி.செல்வராஜ்,<br>இணை இயக்குநர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம்,<br>சென்னை-600 006. | கரூர் |
| 15. | முனைவர்.ச.சுகன்யா,<br>இணை இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை - 600 006. | கிருஷ்ணகிரி &<br>தர்மபுரி |
| 16. | திருமதி.க.ஸ்ரீதேவி,<br>இணை இயக்குநர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-600 006. | கன்னியாகுமரி |
| 17. | திருமதி..செ.அமுதவள்ளி,<br>இணை இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை - 600 006. | பெரம்பலூர் &<br>அரியலூர் |
| 18. | திரு.பொ.பொன்னையா,<br>இணை இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை - 600 006. | புதுக்கோட்டை |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 19. | முனைவர்.வை.குமார்,<br>இணை இயக்குநர்,<br>மாநில திட்ட இயக்ககம்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,<br>சென்னை – 600 006. | இராமநாதபுரம் |
| 20. | முனைவர். பி.குமார்,<br>இணை இயக்குநர்,<br>பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி<br>இயக்ககம், சென்னை – 600 006. | நீலகிரி |
| 21. | முனைவர். த.ராஜேந்திரன்,<br>இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)<br>பள்ளிக் கல்வி இயக்ககம்,<br>சென்னை – 600 006. | திருச்சி |
| 22. | திருமதி. நா.ஆனந்தி,<br>இணை இயக்குநர்,<br>மாநில திட்ட இயக்ககம்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,<br>சென்னை – 600 006. | திருப்பூர் |
| 23. | திரு.எம்.இராமசாமி,<br>இணை இயக்குநர் (மேல்நிலை),<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை-600 006. | ஈரோடு |
| 24. | திருமதி.எஸ்.சாந்தி,<br>இணை இயக்குநர்,<br>தொடக்கக் கல்வி இயக்ககம்,<br>சென்னை – 600 006. | திருவண்ணாமலை |
| 25. | திரு.P.அய்யண்ணன்,<br>இணை இயக்குநர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம்,<br>சென்னை-600 006. | வேலூர் |
| 26. | திருமதி.A.ஞானகௌரி,<br>இணை இயக்குநர் (மேல்நிலை),<br>பள்ளிக் கல்வி இயக்ககம்,<br>சென்னை – 600 006. | திருநெல்வேலி |
| 27. | திரு.R.பூபதி,<br>இணை இயக்குநர் (இடைநிலை),<br>பள்ளிக் கல்வி இயக்ககம்,<br>சென்னை- 600 006. | மயிலாடுதுறை &<br>நாகப்பட்டினம் |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 28. | திரு.ச.கோபிதாஸ்,<br>இணை இயக்குநர்,<br>தொடக்கக் கல்வி இயக்ககம்,<br>சென்னை-600 006. | திண்டுக்கல் |
| 29. | திரு.R-சுவாமிநாதன்,<br>இணை இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை - 600 006. | தஞ்சாவூர் |
| 30. | திரு.கே.முனுசாமி,<br>இணை இயக்குநர்,<br>கள்ளர் சீரமைப்பு, மதுரை. | தூத்துக்குடி |
| 31. | திரு.M.ராமகிருஷ்ணன்,<br>இணை இயக்குநர்-II,<br>தனியார் பள்ளிகள் இயக்ககம்,<br>சென்னை - 600 006. | சிவகங்கை |
| 32. | திருமதி.கே.பி.மகேஸ்வரி,<br>இணை இயக்குநர் (பணியாளர்),<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை-600 006. | விருதுநகர் |
| 33. | திரு.R.முருகன்,<br>இணை இயக்குநர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-600 006. | நாமக்கல் |
| 34. | திரு.J.ஆன்ஜெலோ இருதயசாமி,<br>இணை இயக்குநர்,<br>தனியார் பள்ளிகள் இயக்ககம்,<br>சென்னை-600 006. | மதுரை |
| 35. | திருமதி.R.திருவளர்செல்வி,<br>துணை இயக்குநர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-600 006. | தேனி |

பிரிவு அலுவலர்

31/01/25

www.Padasalai.Net